## ஆண்டாள் அருளிச் செய்த
# நாச்சியார் திருமொழி 3: கோழியழைப்பதன்
## (கண்ணன் கவர்ந்த கூறைகளைக் கன்னியர் இரத்தல்)

524 * கோழி அழைப்பதன் முன்னம் * குடைந்து நீராடுவான் போந்தோம் *
ஆழியஞ் செல்வன் எழுந்தான் * அரவணை மேல் பள்ளி கொண்டாய்! **
ஏழைமை ஆற்றவும் பட்டோம் * இனி என்றும் பொய்கைக்கு வாரோம் *
தோழியும் நானும் தொழுதோம் * துகிலைப் பணித்தருளாயே 1

525 இதுவென் புகுந்தது இங்கந்தோ! * இப்பொய்கைக்கு எவ்வாறு வந்தாய்? *
மதுவின் துழாய் முடி மாலே! * மாயனே! எங்கள் அமுதே! **
விதியின்மையால் அது மாட்டோம் * வித்தகப் பிள்ளாய்! விரையேல் *
குதிகொண்டு அரவில் நடித்தாய்! * குருந்திடைக் கூறை பணியாய் 2

526 எல்லே ஈதென்ன இளமை? * எம்மனைமார் காணில் ஒட்டார் *
பொல்லாங்கு ஈதென்று கருதாய் * பூங்குருந்து ஏறி இருத்தி **
வில்லால் இலங்கை அழித்தாய்! * நீ வேண்டியதெல்லாம் தருவோம் *
பல்லாரும் காணாமே போவோம் * பட்டைப் பணித்தருளாயே 3

527 பரக்க விழித்து எங்கும் நோக்கிப் * பலர் குடைந்தாடும் சுனையில் *
அரக்க நில்லா கண்ண நீர்கள் * அலமருகின்றவா பாராய் **
இரக்கமேல் ஒன்றும் இலாதாய்! * இலங்கை அழித்த பிரானே! *
குரக்கரசு ஆவதறிந்தோம் * குருந்திடைக் கூறை பணியாய் 4

528 காலைக் கதுவிடுகின்ற * கயலொடு வாளை விரவி *
வேலைப் பிடித்து என்னைமார்களோட்டில் * என்ன விளையாட்டோ? **
கோலச் சிற்றாடை பலவும் கொண்டு * நீ ஏறி இராதே *
கோலம் கரிய பிரானே! * குருந்திடைக் கூறை பணியாய் 5

529 தடத்தவிழ் தாமரைப் பொய்கைத் * தாள்கள் எம் காலைக் கதுவ *
விடத்தேள் எறிந்தாலே போல * வேதனை ஆற்றவும் பட்டோம் **
குடத்தை எடுத்தேற விட்டுக் * கூத்தாட வல்ல எம் கோவே! *
படிற்றை எல்லாம் தவிர்ந்து * எங்கள் பட்டைப் பணித்தருளாயே 6

530 நீரிலே நின்று அயர்க்கின்றோம் * நீதி அல்லாதன செய்தாய் *
ஊரகம் சாலவும் சேய்த்தால் * ஊழி எல்லாம் உணர்வானே! **
ஆர்வம் உனக்கே உடையோம் * அம்மனைமார் காணில் ஒட்டார் *
போர விடாய் எங்கள் பட்டைப் * பூங்குருந்து ஏறி இராதே 7

531 மாமிமார் மக்களே அல்லோம் * மற்றும் இங்கு எல்லாரும் போந்தார் *
தூமலர்க் கண்கள் வளரத் * தொல்லையிராத் துயில்வானே! **
சேமமேல் அன்றிது சாலச் * சிக்கென நாம் இது சொன்னோம் *

கோமள ஆயர் கொழுந்தே! * குருந்திடைக் கூறை பணியாய் 8

532 கஞ்சன் வலை வைத்த அன்று * காரிருள் எல்லில் பிழைத்து *
நெஞ்சு துக்கம் செய்யப் போந்தாய் * நின்ற இக்கன்னியரோமை **
அஞ்ச உரப்பாள் அசோதை * ஆணாட விட்டிட்டு இருக்கும் *
வஞ்சகப் பேய்ச்சி பால் உண்ட * மசிமையிலீ![1] கூறை தாராய் 9

533 * கன்னியரோடு எங்கள் நம்பி * கரிய பிரான் விளையாட்டை *
பொன்னியல் மாடங்கள் சூழ்ந்த * புதுவையர் கோன் பட்டன் கோதை **
இன்னிசையால் சொன்ன மாலை * ஈரைந்தும் வல்லவர் தாம் போய் *
மன்னிய மாதவனோடு * வைகுந்தம் புக்கு இருப்பாரே 10

**அடிவரவு:** கோழி இது எல்லே பரக்க காலை தடத்து நீரில் மாமிமார்
கஞ்சன் கன்னியரோடு தெள்ளியார்

[1] மகிமையிலீ